**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No. 03/2022**
**Deposition of witness of Plaintiff – P.W.1 (முத்துராமன்)**
**18.11.2025**

**3 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. விராலிமலை அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவிலின் செயல்அலுவலர் என்ற முறையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.
2. தாவா கோவில் பட்டியலில் சேர்ந்த கோவில் என்றும், அதற்கு உயர் அதிகாரி இணை ஆணையர் மற்றும் ஆணையர் ஆகும். இந்த வழக்கை இந்துசமய அறநிலைத்துறை ஆணையரின் அனுமதி இல்லாமல் தாக்கல் செய்வதற்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு அனுமதி இல்லாமல் வழக்கு தாக்கல் செய்யலாம் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.
3. தாவா சொத்தான 1 ஏக்கர் 73 செண்ட் நிலத்தை கட்டியம் ஓதுவர் ஊதியத்திற்காக 1 ஆம் பிரதிவாதிக்கு நிபந்தனைக்கு உட்பட்டு வழங்கப்பட்டது என்றும், சட்டப்படி நிர்ணயம் செய்யப்பட்ட தொகையினை 1 ஆம் பிரதிவாதி செலுத்தியதால் நிபந்தனை நீக்கப்பட்டு 1 ஆம் பிரதிவாதிக்கு மட்டுமே முழு உரிமை உள்ள சொத்தாக அவருடைய அனுபவத்திலும் பாத்தியத்திலும் இருந்து வந்தது என்றால் சரியல்ல, தாவா சொத்திற்கும் வாதி திருக்கோயிலுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.
4. தாவா சொத்தை 1 ஆம் பிரதிவாதியிடம் இருந்து 25.11.1981 ஆம் தேதி சரியான பிரதிபலனுக்கு 3 ஆம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றும், அந்த தேதியில் இருந்து தாவா சொத்தை 3 ஆம் பிரதிவாதி முழு உரிமையாளர் என்ற முறையில் தொடர்ச்சியாக அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல.
5. தாவா சொத்திற்கு சுந்தரி என்ற செல்லம்மாள் பெயரில் நாளது வரை பட்டா உள்ளது என்றால் சரிதான். தாவா 1 ஏக்கர் 72 செண்டில் ஒரு பகுதியை ரத்னா நகர் என்று மனை பிரிவுகளாக பிரித்து விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த மனைக்கட்டுகளில் 26 வது மனையை 2 ஆம் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளதால் அவரை வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளோம் என்றால் சரிதான். அதில் அவர் தவிட்டு மில் கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். அதை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.
6. 1 ஏக்கர் 73 செண்டில் விற்பனை செய்யப்பட்டது போக மீதமுள்ள இடம் 3 ஆம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கை

தாக்கல் செய்வதற்கு இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரை இல்லை என்றால் சரியல்ல.
7. வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது. மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

S/d – C.Rajesh, B.A.B.L.,
சார்பு நீதிபதி,
கீரனூர்.